III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE

O.S.288/2019

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 10-07-2023

| | | | |
|---|---|---|---|
| Name | :Bakiya Lakshmi | Caste | : |
| Husband's Name | :Santhosh Kumar | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

இவ்வழகில் நான் இரண்டாம் வாதி. நான் சென்னை ஆவடியில் உள்ள மிட்டனமல்லி பகுதியில் வசித்து வருகிறேன். பிராதில் நான் அம்பத்தூர் தாலுக்கா முத்தாபுதுப்பேட்டை கிராமம் ராஜிவ் நகரில் வசித்து வருகிறேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஒன்றாம் வாதி என்னுடன் மிட்டனமல்லியில் வசித்துவருகிறார். ஒன்றாம் வாதி எனது தாயார். ஒன்றாம் வாதி சென்னை கோட்டையில் உள்ள மிலட்டரி இன்ஜினியரிங் சர்வீஸஸில் வேலை பார்த்து வந்தார். தற்போது ஓய்வு பெற்றுவிட்டார். தாவா சொத்து அம்பத்தூர் முத்தாபுதுப்பேட்டை ராஜிவ் நகரில் உள்ளது. தாவா சொத்து வீடு. அதன் விலாசம் கதவு எண்.3, 3வது தெரு, ராஜிவ் நகர், முத்தாபுப்பேட்டை கிராமம். அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம். அதன் சர்வே எண்.2/5, புதிய சரிவே எண்.2/5 A. இந்த சொத்திற்கு பட்டா உள்ளது அதை நான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் 1800 சதுர அடி. தாவா சொத்திற்கு கிழக்கில் காலி மனையும், மேற்கே ஒரு வீடும், வடக்கே சாலையும், தெற்கே வீடும் உள்ளது. தாவா சொத்தின் நான்கு புற அளவுகள் எனக்கு தெரியாது. தாவா சொத்து முதலில் எனது அம்மாவின் சித்தியான சரோஜா அம்மாள் பெயரில் இருந்தது. தாவா சொத்தை சரோஜா அம்மாள் 1990ல் கிரையம் முனுஷா பானு என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினார். அந்த முனுஷா பானு யாரிடமிருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கியிருந்தார் என்பது எனக்கு ஞாபகமில்லை. சரோஜா அம்மாள் முனுஷா பானுவிடமிருந்து கிரையம் வாங்கிய

பத்திரத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். சரோஜா அம்மாள் தாவா சொத்தை காலி மனையாக வாங்கினார். அவர் 2006ல் வீடு கட்டினார். சரோஜா அம்மாளுக்கு திருமணமானது, ஆனால் அவருக்கு குழந்தைகள் இல்லை. சரோஜா அம்மாளின் கணவர் 2002ல் இறந்தார். சரோஜா அம்மாளுக்கு எந்த வாரிசுதாரரும் இல்லை ஆகையால் என்னை தத்து எடுத்து அவர் வளர்த்து வந்தார் என்று நான் பிராதில் கூறியுள்ளேன். சரோஜா அம்மாள் 2010ல் இறந்தார். நான் 2006லிருந்து சரோஜா அம்மாள் இறக்கும் வரை நான் அவருடன் இருந்தேன். சரோஜா அம்மாளின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். இரண்டாம் பிரதிவாதி ஜூலியட் என் மீதும் முதல் வாதியின் மீதும் பூவிருந்தவல்லி சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருந்தார். அதன் எண் எனக்கு தெரியாது. அந்த வழக்கு முதலேற்பு வழக்கு எண்.321/2010 என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நானும் ஒன்றாவது வாதியும் ஆஜாராகாத காரணத்தினால் அதில் ஜூலியட்டுக்கு சார்பாக தீர்பாகிவிட்டது என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. ( தற்போது சாட்சி அதில் தாங்கள் ex parte ஆகவில்லை என கூறுகிறார்). அந்த தீர்ப்பை தொடர்ந்து ஜூலியட் எங்கள் மீது அந்நீதிமன்றத்தில் ஒரு நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த நிறைவேற்றுதல் மனுவில் 11/11/2011 அன்று நாங்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி எங்களுக்கு அழைப்பானை வந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த முதலேற்பு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்ய கோரி 25/04/02012 அன்று ஒரு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். அந்த மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். ஜூலியட் அதன் பின்னர் அசல் வழக்கு எண். 321/2010ல் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டி ஒரு இடையீட்டு மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு நினைவில்லை. அந்த மனுவில் நாங்கள் பதில் தாக்கல் செய்ஹேதாம். அந்த மனு நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த மனுவில் ஏற்பட்ட தீர்ப்புக்கு எதிராக சீராய்வு மனு தாக்கல் செய்தோமா என்றால் ஞாபகமில்லை. அந்த மனு அனுமதிக்கப்பட்டதை தொடாந்து வழக்கின் சொத்து ரூ.16,00,000 ஆகிவிட்டதால் அவ்வழக்கு திருவள்ளூர் முதன்மை மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் அந்த வழக்கு முதலேற்பு வழக்கு எண்.12/2015 என்று பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் அவ்வழக்கு இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்கு அனுப்பப்பட்டது. அந்த வழக்கில் நானும் எனது தாயாரும் ஆஜராகி வழக்கு நடத்தினோம். எதிர்உரை தாக்கல் செய்தோம். அந்த

வழக்கு 03/10/2016 அன்று ஜூலியட்டுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அந்த தீர்ப்புரைக்கு எதிரிராக மாண்பு மிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். இதற்கிடையில் ஜூலியட் இந்நீதிமன்றத்தில் நிறைவேற்றுதல் மனு 87/2017 தாக்கல் செய்தார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேல்முறையீடு எண்.238/2017. அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது என்றும் அதில் ஜூலியட் கேட்டிருந்த இழப்பீடு பரிகாரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)